யாழ்ப்பாணம்

# அம்பாறைசிங்களவரால்ஆக்கிரமிக்கப்படுகிறது

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை .5 இதழ் 86
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 07 — 05 — 1992

## தமிழிசைவிழாவில் 'யோகி'

(யாழ்ப்பாணம்)

'முஸ்லிம்கள் வாழும் அம்பாறை மாவட்டம் இன்று சிங்களவர்களினுல் ஆக்கிரமிக்கப்படுகிறது. சிங்களவர்களின் துரோகத்தனத்தை முஸ்லிம்கள் உணர்வதாயில்லை' இவ்வாறு 'தமிழிசை' விழாவின் இறுதி நிகழ்ச்சியில், தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலதிபர் யோகரத்தினம் யோகி குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசியதாவது' போரில் வாழ்ந்த தமிழர்கள் அகிம்சை என்ற சங்க கால இலக்கியங்களின் போதத்தினுல் பௌத்தர் ஆனுர்கள். சமணர்கள் ஆனுர்கள்.

இசையை வேற்றுமொழியில் சுவைப்பது போன்று தமிழில் சுவைப்பதில்லை என்பார்கள். ஆனுல் அலைபாயுதே கண்ணு? போன்ற அருமையான பாடல்கள் தமிழிசையாகாதா?

(4-ம் பக்கம் பார்க்க)

## 449 தேயிலை தோட்டங்கள் தனியாருக்கு ஒப்படைப்பு

(கொழும்பு)

இலங்கை அரசுக்குச் சொந்தமாக இருந்த தேயிலைத் தோட்டங்கள் தனிப்பட்ட கம்பனிகளுக்கு வழங்குவதென தோட்டத் தொழில் அமைச்சு எடுத்த நடவடிக்கையின் பிரகாரம் தேர்ந்தெடுக்கப்பட்ட தனிப்பட்ட கம்பனிகளுக்கு

(4ம் பக்கம் பார்க்க)

★ வடக்கு, கிழக்கு மாகாணங்களில்

# இராணுவ நடவடிக்கையினுல் 4 லட்சம் குழந்தைகள் பாதிப்பு

(கொழும்பு)

**வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடர்ந்து இடம்பெற்று வரும் இராணுவ நடவடிக்கையினுல் சுமார் 4 லட்சத்து 87 ஆயிரம் குழந்தைகள் பாதிப்படைந்துள்ளதாக ஐ. நா. வின் குழந்தைகள் நல நிதியம் கவலை தெரிவித்துள்ளது.**

குழந்தைகளில்பெரும்பாலானேர் தமது பெற்றேரை இழந்து அநாதைகளாகிவிட்டதாகவும், உற்றுர் உறவினர்களை இழந்து கடும் துயைத்திற்கு உள்ளாக்கப்படுவதாகவும் மேற்படி அமைப்பின் நிர்வாக இயக்குநர் ஜேம்ஸ் பி. கிராண்ட் மேலும் தெரிவித்துள்ளார்.

எனினும் இலங்கையில் குழந்தைகள் இறபபு விகிதம் பாராட்டுமளவுறகு குறைந்துள்ளதாகவும் 1981ம் ஆண்டு 1000 குழந்தைகளுக்கு 50 பேர்

(4ம் பக்கம் பார்க்க)

## ஏருவூர்பற்று தமிழர் நிவாரணத்தில் புறக்கணிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் ஏருவூர் பற்றில் வாழும் தமிழர்களுக்கான நிவாரணம் வழங்கும் நடவடிக்கை அரசால் புறக்கணிக்கப்பட்டுவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்பகுதியில் 1990ம் ஆண்டு முதல் இவ்வருடம் வரை திட்டமிட்ட ரீதியில் தமிழர்களுக்கான நிவாரண நடவடிக்

[4ம் பக்கம் பார்க்க]

## ஐ. தே. கட்சியினர் கொலைகளுக்கு சுதந்திரக்கட்சியினரே காரணம்

(கொழும்பு)

நுவரெலியாவில் சில ஐக்கிய தேசியக்கட்சியினரின் கொலைகளுக்கு சுதந்திரக்கட்சியே காரணமாகும் என ஜனதிபதி பிரேமதாசாவின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஏ. எம். சொக்ஸி கடந்த திங்கட்கிழமை உயர்நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

ஐக்கியதேசியகட்சி நிர்வாகிகளை ராஜினுமா செய்யுமாறு மட்டும் உததரவு இடப்படவில்லை ஏனைய ஆதரவாளர்களுடன் இணைந்து கூட்டங்களை நடத்தி பகிரங்கமாக தங்கள் ராஜினுமாவை அறிவிக்குமாறு அவர்கள் வற்புறுத்தப்பட்டனர் இது ஐ. தே. க.

(4-ம் பக்கம் பார்க்க)

## மட்டு. பெரியபுல்லுமலையில் நான்கு தமிழர் சுட்டுக் கொலை

(மட்டுநகர்)

மட்டக்களப்பு பெரியபுல்லுமலையில் நான்கு தமிழர்கள் இராணுவத்தினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பெரியபுல்லுமலையிலிருந்து 20 மைல்களுக்கு அப்பாலுள்ள கூட்டுறவு கடையில் உணவுப் பொருட்கள் பெற்றுக்கொள்ள வந்த அப்பாவிப் பொதுமக்களே இவ்வாறு கொல்லப்பட்டவர்களாவர்.

இவர்களின் சடலங்கள் அனுதரவாக பற்றைக்காட்டில் வீசப்பட்டிருந்ததுடன் உணவுப்பொதிகள் யாவும் படையினரால் கொண்டு செல்லப்பட்டன. (ரி)

ராஜீவ் நினைவுநாளில்

## புலிகள் தடை குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும்

[புதுடில்லி]

இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்வதா இல்லையா என்பது குறித்து ராஜீவ் காந்தியின் நினைவு நாளான இம்மாதம் 21ம் திகதிக்குள் பெரும்பாலும் இறுதி முடிவெடுக்கப் பட்டுவிடும் என மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் உறுப்பினர் ஒருவரின் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே உள்துறை அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்

[4-ம் பக்கம் பார்க்க]

## மன்னரில் இராணுவத்தால் நெல் மூடைகள் எரிப்பு

(மன்னர்)

மன்னரில் அண்மையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது தமிழர்களின் வீடுகளிலிருந்த நெற் கதிர்கள், நெல் மூடைகள் யாவும் சிறிலங்கா இராணுவத்தினரால் தீமூட்டி எரிக்

(4ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு மேதினத்தில் தொழிலாளர் மகத்துவம் விளக்கப்படவில்லை

[கொழும்பு]

கொழும்பு மாநகரில் நடைபெற்ற மேதின பேரணிகளில் லட்சக்கணக்கில் மக்கள் கலந்து கொண்டாலும் தொழிலாளர்களின் எதிர்கால முன்னேற்றத்தை விளக்கும் எந்த விடயங்களும் பேரணியிலும் கூட்டங்களிலும் இடம்பெறவில்லை என்று அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கிருர்கள்.

மேதினக் கூட்டங்களில் ஐ. தே. கட்சியின் பாட்டுக்கச்சேரியும் ஏழு கட்சிகள் இணைந்த ஸ்ரீ ல சு. கட்சி

[4ம் பக்கம் பார்க்க]

## தபால் மா அதிபர் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் மாகாண உதவி தபால் மாஅதிபர் அலுவலகம் நேற்று அரச அதிபர் கா. மாணிக்கவாசகரினுல் திறந்து வைக்கப்பட்டது.

யாழ். மாவட்ட உதவித் தபால் மாஅதிபர் திரு. சேதுகாவலர் இவ்வைபவத்தில கலந்துகொண்டு பேசுகையில்:

''யாழ். மாவட்டத்திலுள்ள

(4-ம் பக்கம் பார்க்க)

## நெசவுப் பொருட்களுக்கு தற்காலிக தடை

(கொழும்பு)

யாழ். மாவட்ட நெசவாளர்களுக்கு வேண்டிய நூல் மற்றும் ரசாயனப் பொருட்களை கொண்டுசெல்வதற்கு அரசு அனுமதி அளித்திருந்த போதிலும் கூட்டுப்படை தலைமையகம் தற்காலிக தடை விதித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படிப் பொருட்களை யாழ். மாவட்டத்துக்கு கொண்டு செல்வதற்குமுன் யாழ். அரச அதிபர் திரு. கா மாணிக்கவாசகரிடம் விளக்கங்கள் கோரப்பட இருப்பதாகவும் யாழ். அரச அதிபர் கொழும்பு சென்று விளக்கமளித்த பின்பு இப்பொருள்களைக் கொண்டு செல்வதற்குக் கூட்டுப்படைத் தலைமைச் செயலகத்தின் அனுமதி வழங்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது (வி)

## "எமது சமாதான முயற்சியை விடாது தொடர்வோம்" பிக்குகள் குழு அறிவிப்பு

(கொழும்பு)

எமது சமாதான முயற்சியை விடாது தொடர்வோம் என்று யாழ். வந்த பிக்குகள் குழு கொழும்பில் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் கடந்த மாதம் விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்திவிட்டுகொழும்பு திரும்பிய இக்குழுவினர் தென் பகுதியில் புலிகளின் நிலைப்பாடு பற்றி விளக்கிவருகிருர்கள்.

அரசுடன் பேச்சு நடத்திய பின் மீண்டும் யாழ். சென்று புலிகளைச் சந்தித்து நாட்டில் சமாதானம் நிலவ பாடுபடு

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கடைக்குரிய 2 முதிரை அலுமாரி, 1 சோக்கேஸ் விற்பனைக்குண்டு. தொடர்பு:செ. யோகராசா. 49 4 யாழ் றோட், யாழ்ப்பாணம். (சிறிதர் படமாளிகை பின்பக்கம்) (சி-6259)

### தேவை

கிறீன் சிபஸ் ரெயிலறிங் ஸ்தாபனத்திற்கு உடுப்புகள் தைக்கக்கூடிய ஆண்கள் தேவை. தொடர்பு கொள்ளவும்: கிறீன் சிபஸ் ரெயிலறிங், மத்திய பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (சி 6255)

### English Tution

O/L. Syllabus taught in 6 months time by Retired Principal B. Sc (Ceylon) 85, Nilankovaladi Tirunelveli. [C 6261]


# தமிழீழ மீட்புநிதி கடன் மீளளிப்பு

[யாழ்ப்பாணம்]

தமிழீழ மீட்பு நிதிக்கு கடனளித்தோரில் தேர்ந்தெடுக்கப்பட்ட 536 பேருக்கு கடன் மீளளிப்பு இம்மாதம் 16-ம், 17-ம் திகதிகளில் நடைபெறும்

தமிழீழ மீட்புநிதி கடன் மீளளிப்பு பெறுபவர்கள் இலக்கம் வருமாறு;

தொடர்பு இல: யா/தெ/

832, 46, 72, 466, 2092, 632, 930, 990, 2197, 35, 991, 2695, 508 922, 940, 2298, 4174.

யா/ச/

23, 731, 1395, 2541, 221, 3330, 1524, 1861, 68, 2951, 4211, 282, 4001. 1520, 2133, 4209, 753, 805 2532, 4159, 810, 2095, 1288, 4015, 954, 4250, 136, 2142.

யா/வே/

54, 587, 189, 03, 954, 1128, 04, 53, 222, 458.

யா/க/

13.

யா/வ. கி/

787, 779, 717, 40,

யா/க/

417, 922, 959, 326, 438, 990, 673, 2689, 4012, 4285, 4416, 912, 921, 3649, 4510, 4904, 139, 208, 4712, 663, 813, 4164, 381, 4026, 4727, 301, 914, 4310.

யா/பரு/

20, 135, 814, 943, 1536, 1573, 116, 1590, 3869, 168, 807, 1223, 2973, 33, 316, 650, 768, 867, 4190. 209, 577, 836, 3574, 693. 1226, 210, 1928, 1569, 2048, 4312, 89, 283, 480, 918, 2966. 3782, 4230, 125.

யா/சா/

3264, 965, 2290, 02, 6303, 558, 393, 2679, 3964, 5754, 6976, 4517, 157, 708, 1768.

யா/வெ/

20, 185, 504. 645, 727, 508, 622, 648, 680, 792, 32, 614, 967, 1033, 08, 538, 546, 847. 903, 84, 471, 864, 1610, 117, 779, 944, 53, 555, 1620, 178, 638. 765, 966, 59, 200, 643, 718, 289, 812, 1368, 109, 922, 928, 719, 905, 1031. [தொடரும்)

# இந்திய விமானத்தில் வெடிகுண்டுப் புரளி

(புதுடில்லி)

புதுடில்லியிலிருந்து நேற்று முன்தினம் பாகிஸ்தானின் கராச்சி நகர் நோக்கிப் புறப்பட்ட இந்திய விமானத்தில் வெடிகுண்டு இருப்பதாகப் புரளி கிளம்பியதை அடுத்து விமானம் 15-வது நிமிடம் கழித்து மீண்டும் தரை இறங்கியது.

இவ்விமானத்தில் பயணம் செய்த 75 விமானப்பயணிகளும் பாகிஸ்தான் விமானம் மூலம் கராச்சி சென்றதாக விமான அறிவிப்பாளர் தெரிவித்தார். (மா)

# யாழ். பல நோ. கூ. சங்கம் விரைவில் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண ப. நோ. கூ. சங்கம் மிக விரைவில் புனரமைப்புச் செய்யப்பட இருக்கின்றது.

இச்சங்கத்துக்கு யாழ் நகரில் 40 கிளைகள் தற்போது இருந்த போதிலும் கடந்த இரு மாதங்களாக மிக பந்தமான நிலையிலேயே இக்கிளைகளில் விற்பனை நடைபெறுவதினால் சங்கத்துக்கு பெரும் நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

# யுத்தத்தை நிறுத்த
## ஐக்கிய தொழிலாளர் கோரிக்கை

(கொழும்பு)

''வடக்குக்கிழக்கில் நடைபெறும் யுத்தத்தை உடனடியாக நிறுத்தவேண்டும்''

இவ்வாறு 'ஐக்கிய தொழிலாளர் சங்கம்' தெமட்டக்கொட மைதானத்தில் நடாத்திய 'மே' தினக்கூட்டத்தில் உரையாற்றிய பொதுச் செயலாளர் மல்லிமாரச்சி அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும் அவர்பேசியதாவது;

யுத்தத்தை பெரும்பாலான மக்கள் விரும்பவில்லை. உரிமைகள் [மறுக்கும் முதலாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். என்றார். (சு)

மே 14ம் திகதி

# அரச ஊழியர் சம்பளம்

(கொழும்பு)

வெசாக் பண்டிகையை முன்னிட்டு மே மாதத்துக்குரிய அரச ஊழியர்களுக்கான சம்பளம் வரும் 14ம் திகதி வழங்கப்படவுள்ளது. (கே)

# உதைபந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு நடாத்தி வரும் உதைபந்தாட்ட 2ம் சுற்று போட்டியின் இன்றைய ஆட்டம்;

பாசையூர் சென். அன்ரனீஸ் அணியை எதிர்த்து நவசக்தி அணி மோதும். இப்போட்டி நெல்லியடி ம.ம.வி. யில் நடைபெறும்.

# மிளகாய் செய்கை பாதிப்பு

[பண்டத்தரிப்பு]

வலிகாமம் மேற்கு பகுதியில் மிளகாய்ச்செய்கை குருமன நோயினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு. மாதகல், சங்கானை ஆகிய இடங்களிலுள்ள விவசாயிகளின் மிளகாய்ச் செடிகள் இந்த நோயினால் முருகுபிடித்து இலைகள் சொரிந்துள்ளதால் விவசாயிகளுக்கு பலத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை இந்தநோய்க்கு பயன்படுத்தப்படும் கிருமிநாசினி மருந்துக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது. (72)

# பயிற்சி ஆசிரியரை நிரந்தரமாக்க முடிவு

(கொழும்பு)

பட்டதாரி பயிற்சி ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்படவுள்ளனர்.

இதுசம்பந்தமான பரீட்சை எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் பரீட்சை ஆணையாளரால் நடாத்தப்படவுள்ளது. —கே

# இராசி பலன்

**07/05/1992**

**வியாழக்கிழமை**

**(தமிழுக்கு சித்திரை 25)**

பஞ்சமி பி. ப. 4-12 வரை, திருவாதிரை மு. ப. 10-29 வரை, மரணயோகம், இராகு காலம் பகல் 1-23 முதல் 2-53 வரை, சுபநேரம் காலை 7-25 முதல் 8-55 வரை, அக்கினி நாள் ஆரம்பம் பி.ப. 1-42 வரை.

மேடம்: நல்ல மாற்றம், எதிர்பாராத நன்மை, பயணம்.

இடபம்: புதிய சிந்தனை, தொழில்நஷ்டம், குறைகேட்டல்.

மிதுனம்: தொழில் அபிவிருத்தி, இனசன வரவு, அதிர்ஷ்டம்.

கடகம்: பிரச்சனை தீர்வு, நோய் நிவர்த்தி, காரிய தாமதம்.

சிங்கம்: வீடு சம்பந்தமான யோசனை, தெய்வசிந்தனை, செலவு,

கன்னி: வருமானம் அதிகரிப்பு, குடும்பசுகம், அதிக யோசனை.

துலாம்: பணமுடை, அநாவசிய தொல்லை, ஏமாற்றம்.

விருச்சிகம்: எச்சரிக்கை தேவை சிறியபகை, மனச் சங்கடம்.

தனுசு: தாமதமான செயல், எதிர்பாராத உதவி, குடும்ப நன்மை.

மகரம்: சுபகாரியம், வாக்கு வசீகரம், தொழில் முதலீடு.

கும்பம்: தெய்வீக செலவு, மனக்களிப்பு. விவேகம்.

மீனம்: கடும்சினம், வேண்டாகபகை, அலைச்சல்.


# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## பொன்னம்பலம் விஜயரெட்ணம்

| தோற்றம்: | மறைவு: | திதி: |
|---|---|---|
| 28-6-1920 | 29-4-1990 | 7-5-1992 |

எங்கள் குடும்ப விளக்கை நினைவு கூரும்:

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.

1/1, 1-ம், ஒழுங்கை,
ஈச்சமோட்டை வீதி,

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றேட். யாழ்ப்பணம்.

[கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

**A/L கலை, வர்த்தகம்**

**94 பிரிவு - 2**

**ஆரபபம்: 09-05-1992**

காலை 8.00 மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. கலாகரன் |
| வர்த்தகம் | — | திரு. தேவா |
| கணக்கியல் | — | திரு. வன்னியசிங்கம் |
| அளவையியல் | — | திரு. சுப்பிரமணியம் |
| தமிழ் | — | திரு குழந்தை |
| இந்து நாகரிகம் / இந்து சமயம் | — | திரு. காரைசுந்தரம்பிள்ளை |
| புவியியல் | — | திரு. குணராசா |
| அரசியல் | — | திரு. ஜெயகாந்தன் |
| வரலாறு | — | திரு. சிறீதரன் |

[எ 2119]

## COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE

4 MONTHS

சனி, ஞாயிறு வகுப்புகள்

**ஆரம்பம்: 09-05-1992**

8. 30 மணி

Lectures By; **S. P. Sivapathasundaram**
M. I. D. P. M. (Lond)

★ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
★ கூடிய செய்முறைப் பயிற்சி
★ பயிற்சி முடிவில் பெறுமதிவாய்ந்த சான்றிதழ்

**C. I. M. A. Stage I, I. A. B. (All Stages)**

விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**

(Pioneers in Computer Education)
16, 3rd CROSS STREET,
JAFFNA. (எ-2117)

நல்லூர் கிளை நூலகம்
மாநகரசபை
யாழ்ப்பாணம்



## தமிழீழ பெண்கள் ஆய்வு நிறுவனம்:

# வி. பு. மகளிர் முன்னணியின் கட்டுப்பாட்டில் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணியின் நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் இந்த ஆய்வு நிறுவனம் இயங்கும்.

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கிளிநொச்சியில் கடந்த மார்ச்மாதம் 7ம், 8ம் திகதிகளில் நடைபெற்ற தமிழீழப் பெண்கள் தேசிய மாநாட்டின் போது, பெண்கள் பிரச்சினை சம்பந்தமாக ஒரு ஆய்வு நிறுவனத்தை அமைப்பதென, விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணி வேலைத்திட்டத்தில் ஒரு முக்கிய அம்சமாகவும் இடம் பெற்றது.

காலம்காலமாக, பல நூற்றாண்டுகளாக, தமிழீழப்பெண்ணினம் சமூக, அரசியல், பொருளாதார ரீதியில் பல்வேறு ஒடுக்குமுறைகளைச் சந்தித்து வருகிறது. அரச பயங்கரவாத அடக்குமுறை ஒருபுறமும் தொடரும் போர்ச் சூழ்நிலையின் தாக்கங்கள் மறுபுறமுமாக பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறையை மேலும் தீவிரப்படுத்தியிருக்கிறது. இந்த நெருக்கடியான சூழ்நிலையில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரத்தியேகமான பிரச்சினைகளை இனம்கண்டு அவற்றிற்குத் தீர்வுகாணும் வகையில் வேலை திட்டங்களை அமைத்து, மகளிர் முன்னணி செயற்பட்டு வருகிறது.

பெண்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் ஆக்கபூர்வமான வேலைத்திட்டங்களை வகுத்து அவற்றை நடைமுறைப்படுத்துவதானால், முதலில் பெண்களை எதிர்நோக்கும் பிரச்சினைகள் விஞ்ஞான ரீதியில் ஆய்வு செய்யப்பட வேண்டும். இந்த விஞ்ஞான ஆய்வின் அவசியத்தையும் தேவையையும் உணர்ந்தே ஒரு ஆய்வு நிறுவனத்தை அமைக்க மகளிர் முன்னணி முடிவு எடுத்தது.

இந்த ஆய்வு நிறுவனத்தின் நோக்கங்களும் குறிக்கோள்களும் வருமாறு:

1. பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் சம்பந்தமான புள்ளிவிபரங்கள், தரவுகள், பட்டறிவு விபரங்கள் ஆகியவற்றைச் சேர்த்து தொகுத்தல்.

2. சமூகவியல், ஆய்வுக்கான பிரச்சினைகளை இனம்காணுதல். கோட்பாடுகளுக்கும் கருத்துருவங்களுக்கும் தெளிவான வரைவிலக்கணங்களை நெறித்தல். ஆய்வுமுறையை வகுத்தல் வேலைத்திட்டங்களின் செயற்பாட்டுத் தன்மையைப் பரிசீலனை செய்தல்.

3. தமிழீழப் பெண்களின் சமூக, அரசியல், பொருளாதார வாழ்க்கைநிலையை ஆய்வு செய்து அறிதல்.

4. இந்த ஆய்வு நிறுவனம் தமிழீழப் பெண்கள் பற்றிய தகவல் மையமாகவும் செயற்படும்.

5. இந்த ஆய்வு நிறுவனம் சர்வதேசப் பெண்கள் ஆய்வு நிறுவனங்களுடனும், மற்றும் பெண் உரிமைக்காகப் போராடும் உலக மகளிர் அமைப்புகளுடனும் தொடர்புகளை அமைத்துச் செயற்படும்.

பொதுவாக பெண்கள் பற்றியும், குறிப்பாக தமிழீழப் பெண்கள் சம்பந்தமாகவும் ஆய்வுநூல்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள் மற்றும் ஆவணங்களை இவ் ஆய்வு நிறுவனத்துக்கு அன்பளிப்புச் செய்ய விரும்புவோர் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனம், இராஜவீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

---

## கடற்புலிகளின் இருநாள் விளையாட்டுப் போட்டி

(பருத்தித்துறை)

கடற்கரும்புலிகளான கப்டன் சிதம்பரம் கப்டன் ஜெயந்தன் நினைவாக கடற்புலிகளால் நடாத்தப்பட்ட இருநாள் விளையாட்டுப் போட்டிகள் கடந்த 4ம், 5ம் திகதிகளில் மிகச்சிறப்பாக நடைபெற்றன.

இவ்விளையாட்டுப் போட்டிகளில் தமிழீழ கடற்படைத் தளபதி திரு கங்கை அமரன் கலந்துகொண்டார். வன்னிப் பிராந்திய கடற்படைத் தளபதி திரு. தேவன் தமிழீழத் தேசியக்கொடியை ஏற்றி ஆரம்பித்துவைத்தார். விளையாட்டுக்கள் பருத்தித்துறை இறங்குதுறைப்பகுதியில் நடைபெற்றன. (5மைல் நீச்சல் போட்டி பருத்தித்துறை இறங்குதுறையில் ஆரம்பிக்கப்பட்டு வல்வெட்டித்துறையிலும், 1மைல் நீச்சல்போட்டி வியாபாரிமூலையிலும் முடிவுற்றன. அஞ்சல் நீச்சல் போட்டி, நீச்சல் போட்டிகள், கட்டுமரம் வலித்தல் போட்டி, சுழி ஓட்டப்போட்டி, பந்து கடத்தும் போட்டி, கடலில் தலையணைச் சண்டைப் போட்டி, கடலில் மிதத்தல் போட்டிகள் என்பன இடம் பெற்றன. போட்டிகளின் போது யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி, யாழ். மாவட்ட தளபதி திரு. செல்வராசா, கடற்புலிகள் மகளிர் படைத்தளபதி நளாயினி, தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு நடேசன், கடற்புலிகளைச் சேர்ந்த திரு. ஸ்ரெனின்லொஸ் மாஸ்டர் உட்பட இன்னும்பலர் இவ் விளையாட்டு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டனர். (52)

---

## விபுலானந்தர் கல்லூரி தரமுயர்வு

(மட்டுநகர்)

மட்டக்களப்பு விபுலானந்தர் இசை நடனக் கல்லூரியின் தரம் உயர்த்தப்படவுள்ளது. (கே)

---

## ராஜீவ் கொலை: புலிகள் செய்ததற்கான போதிய ஆதாரம் இல்லை

### — அமைச்சர் சவான்

(சென்னை)

ராஜீவ்காந்தி கொலையில் விடுதலைப்புலிகள் சம்பந்தப்பட்டிருந்தனர் என்பது குறித்து போதுமான ஆதாரங்கள் கிடைக்காமல் அந்த இயக்கத்தை இந்தியாவில் தடை செய்ய முடியாது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. எஸ். பி. சவான் தெரிவித்துள்ளார்.

இதனைத்தொடர்ந்து இதற்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா பலத்த ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் இனியும் காலதாமதம் செய்யாமல் புலிகள் இயக்கத்தை தடை செய்யுமாறு மத்திய அரசை செல்வி ஜெயலலிதா மீண்டும் கேட்டுக்கொண்டுள்ளார்.

தமிழ்நாட்டில் நிகழ்ந்த சில சம்பவங்களுக்கு இந்த இயக்கமே காரணமாக இருந்ததென்றும், கொள்ளைச்சம்பவங்களுக்கு புலனாய்வுப் பிரிவினரிடம் ஆதாரங்கள் இருப்பதாகவும், மேலும் தமிழ் நாட்டில் மூலைமுடுக்குகள் எல்லாம் ஊடுருவி அதிர்ச்சி அளிக்கும் வகையில் மக்களோடு ஒன்றுக் கலந்து பிரிவினைச் செயல்களில் ஈடுபட்டும் வந்துள்ளார்கள். ஆகவே புலிகள் இயக்கத்தை காலதாமதம் செய்யாமல் தடை செய்யவேண்டும் என்று செல்வி ஜெயலலிதா மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

---

## வரலாற்றுச் சான்றுகளை

# வரைபடங்களாக

## ஆவணப்படுத்த முயற்சி

(யாழ்ப்பாணம்)

தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்றுச் சான்றுகள் கவனிப்பாரற்ற நிலையில் அழிந்து வருவதால் இவற்றைத் தமிழீழமே இழந்துவிடக்கூடிய நிலை உருவாகியுள்ளது.

இதனால் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின் கட்டிடங்கள், மாதிரிப்படங்கள், கிடைத்தோற்ற, பக்கத்தோற்ற வரை படங்கள் போன்றவற்றை வரைந்து கோணப்படுத்தும் முயற்சியில் தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் அங்கமாகிய தேச நிர்மாணிகளின் பொறியியல் மதியுரையகம் செயற்பட்டு வருகிறது.

இம்முயற்சியின் கீழ் நல்லூரை மத்தியாகக்கொண்ட கலாசாரப் பிரதேசத்திற்குட்பட்ட சங்கிலி மன்னன் தோப்பு அளவீடு செய்யப்பட்டு இதற்கான மாதிரிப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும் சரித்திரத்தொடர்புள்ள நீர் நிலையான யமுனா ஏரி பற்றிய மாதிரிப் படங்கள், அமைவிடப் படங்கள் என்பனவும் தயாரிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் நல்லூர் கலாசார பிரதேசத்திற்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள மந்திரிமனை பற்றிய அளவீடுகளும், மாதிரிப் படங்களும் தயாரிக்கப்படவுள்ளன.

---

## சித்த மருத்துவ மாணவர் வகுப்புகளுக்கு திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக கைதடி சித்த மருத்துவத் துறை வகுப்புகளில் வழமை போல் விரிவுரைகள் நடைபெறுகின்றன.

ஏப்ரல் 7-ம் திகதி ஆரம்பித்த மாணவர் போராட்டம் சித்த மருத்துவத்துறைத் தலைவர், கலைப்பீடாதிபதி, துணைவேந்தர் ஆகியோர் சித்த மருத்துவத்துறை மாணவர்களுடன் நடாத்திய பேச்சுவார்த்தையின் அடிப்படையில் மாணவர்களுக்கும் குறிப்பிட்ட விரிவுரையாளருக்கும் இடையில் நிலவிய கருத்து வேற்றுமைகள் நீக்கி வைக்கப்பட்டதனால் மாணவர்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டுள்ளனர்.

---

## வாழைநார்ப்பட்டு கைத்தொழிற் பயிற்சி

[கொழும்புத்துறை)

தொல்புரம் மத்திய கிராம அபிவிருத்திச் சங்கத்தின் கீழ் இயங்கிவரும் வாழைநார் பட்டு பயிற்சிப் பாடசாலையில் 100க்கு மேற்பட்டோர் பயிற்சி பெற்று கடந்த ஆண்டு இறுதியில் ஓர் பெரிய கண்காட்சி நடாத்தி வலி. மேற்கு உதவி அரசாங்க அதிபரினால் பாடசாலையில் பயிற்சி பெற்ற 60க்கும் மேற்பட்ட பிள்ளைகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

40 பேருக்குக் கற்பொழுது... [illegible]

ஆண்டு நடுப்பகுதியில் மீண்டும் வாழைநார் உற்பத்திப் பொருள்களைக் கொண்ட ஓர் கண்காட்சி சங்கத்தால நடாத்தப்படவுள்ளது.

இக் கைத்தொழில் முயற்சியில் முன்னேற்றமடைந்து விரைவில் வாழைநார் பட்டு வேட்டி சால்வை என்பன எங்கள் பயிற்சி நிலையத்தில உற்பத்தி செய்யவிருப்பதாகவும் சங்கத்தினதும் வலிகாமம் மேற்கு உதவி அரச அதிபர் பிரிவு கிராமஅபிவிருத்திச்சங்க சமாசச் செயலாளருமான... [illegible]

---

## அகதிமுகாமில் எட்டுபேருக்கு தொழுநோய் அறிகுறி

(பண்டத்தரிப்பு)

கெற்பலி அகதிகள் முகாமில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட தொழுநோய் சம்பந்தமான ஆய்வு ஒன்றில் எட்டுப் பேருக்கு தொழுநோயின் ஆரம்ப அறிகுறிகள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

சாவகச்சேரிசுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் நடைபெற்ற இந்த ஆய்வில் மேற்படி அகதிமுகாமிலுள்ள 300 பேர் பரிசோதனைக்குட் படுத்தப்பட்டனர்.

நாவற்குழி ஐயனார்கோவிலடி அகதிகள் முகாமிலும் தொழுநோய் பரிசோதனை நடைபெற்றபோது ஒருவருக்கு தொழுநோய் தொற்றியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இவர்கள் தொழு நோய்ச் சிகிச்சைபெறுவதற்கான உடனடி ஒழுங்குகளை யாழ். பிரதேச தொழுநோய்த்தடுப்பு அதிகாரி திரு. எம். குணரத்தினம் செய்துள்ளார். (72)

---

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டிலுள்ள மெல்லிசைக் கலைஞர்கள், குழுவினர்களுக்கான கலந்துரையாடல் நிகழ்வொன்று நாளை 8ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் கோண்டாவிலில் அமைந்துள்ள விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத் தலைமை செயலகத்தில் இடம்பெறவிருக்கிறது. கலைஞர்கள், இசைக் குழுவினர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளும் வண்ணம் கேட்கப்படுகின்றனர்... [illegible]

---

## இன்று

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு ஸ்ரீ சித்திர வேலாயுதசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும் உற்சவத்தில் 15-ம் திகதி தேர்த் திருவிழாவும், 16-ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருவண்ணை நகர் அருள்மிகு வாலாம்பிகா சமேத விசுவலிங்க வைத்தீசுவர சுவாமி திருக்கோயிலில் லட்சார்ச்சனை இன்று 7ம் திகதி தொடக்கம் 27ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தினம் முற்பகல் 10 மணிக்கு ஸ்நபனாபிஷேகமும், பிற்பகல் 3-45 பஞ்சமுகார்ச்சனையும். மாலை 6-15 க்கு சொற்பொழிவுகளும் இடம்பெறவுள்ளன. (சு)

0 0 0

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மஹோற்சவம் இன்று 7ம்... [illegible]

---

## மனனப் போட்டி

[கொழும்புத்துறை)

தொல்புரம் சர்வோதயத்தினர் ஆத்திசூடி மனனம் செய்த முற்றும் ஓதும் போட்டியை சைவப்புலவர் நா. சிவபாதசுந்தரனார் தலைமையில் சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரியில் நடாத்தி முடித்துள்ளனர்.

தொல்புரம், பொன்னாலை, சுழிபுரம், வட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த அறுபது பிள்ளைகள் இப்போட்டியில் பங்குபற்றினர்கள்.

---

17ம் திகதிவரை நடைபெறும் திருவிழாக்களில் சைவ அறிஞர் திரு. சிவ. மகாலிங்கம் சொற்பொழிவுகள் நிகழ்த்துவார். (சு)

0 0 0

(கொழும்புத்துறை)

தொல்புரம் கொட்டடிப் பதி அருள்மிகு ஸ்ரீ ஆதிமுத்து மாரி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று 7ம் திகதி வியாழக்... [illegible]

# வட. கிழக்கு அபிவிருத்திக்கு 600 கோடி ரூபா உதவி

(மட்டக்களப்பு)

வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்கென உலக வங்கி அறு நூறு கோடி ரூபா நிதி உதவி வழங்கியுள்ளதாக மட்டக்களப்பு அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மீனவர்களுக்கான புனர்வாழ்வு உதவிகள் வழங்கும் வைபவத்தில் மட்டக்களப்பு செயலகத்தில் நிகழ்ந்த வைபவத்திலேயே அவர் இதனை தெரிவித்தார்.

இந்த நிதியைக் கொண்டு இந்த மாகாணத்தில் நிலவும் பொருளாதார மந்தகதியை நீக்கப்பாடுபடவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

# அமெரிக்க - இந்திய படைகள் இந்தியக் கடலில் பயிற்சி

## எதிர்க்கட்சிகள் கண்டனம்

(புதுடில்லி)

இந்திய கப்பற் படையும், அமெரிக்க கப்பல்படையும் இணைந்து இந்திய பெருங் கடலில் கப்பற் படை நடவடிக்கைகளிலும் பயிற்சியிலும் ஈடுபடவுள்ளன.

இந்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. சரத்பவார் நேற்று இந்திய நாடாளு மன்றத்தில இதனை அறிவித்தார்

இதனால் உலக சமாதானம் மேம்பட இருப்பதோடு இந்தியக் கப்பற்படைக்கு அமெரிக்க கப்பற்படையின் நுட்பத்தைக்கான இதுஒரு வாய்ப்பாக அமையும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்திய அரசின் இந்த நடவடிக்கைக்கு எதிர்க்கட்சிகள் பலத்த கண்டனத்தையும் ஆட்சேபனையையும் தெரிவித்துள்ளன, (மா)

# ரொறன்ரோ நகரில் இனக்கலவரம்

(ரொறன்ரோ)

லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் ஆரம்பமான இனக்கலவரங்கள் கனடாவில் ரொறன்ரோ நகருக்கும் பரவியுள்ளது.

தொடர்ந்து இரண்டு தினங்களாக கறுப்பு வெள்ளை இனங்களைச் சேர்ந்த இளைஞர்கள் பொலிஸார் மீது தாக்குதல்கள் நடத்தியதோடு நகர் வீதியிலுள்ள கடைகளின் ஜன்னல்களை உடைத்தார்கள்.

ரொறன்ரோவைச் சேர்ந்த ஒரு வெள்ளை இன பொலிஸார் கறுப்பு இனத்தவரை சுட்டுக் கொன்றதற்கும் லொஸ் ஏஞ்சல்ஸில் கறுப்புஇன சாரதி ஒருவரை தாக்கியதற்கும் நான்கு வெள்ளை இன பொலிசார் விடுதலை செய்யப்பட்டதற்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

ரொறன்ரோநகரில்சுமார்150 இளைஞர்கள் பெற்ரோல் குண்டுகளை எறிந்ததோடு நகைக்கடைகளையும் கொள்ளையடித்தார்கள். (மா)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் க.பொ.த. (சா.த) பரீட்சையில் அதிசிறப்பாக சித்தியடைந்த மாணவிகளுக்கு பாடசாலை அபிவிருத்திச்சங்கம் நாளைக்காலை 8-00 மணிக்கு பரிசளித்து கௌரவிக்கவிருக்கின்றது.

இப்பரிசளிப்பு நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினராக யாழ். கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதமும் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக பதிவாளர் திரு க. பரமேஸ்வரனும் கலந்து கொள்வார்கள்.

## எமது சமாதான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வோமென்றும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

தரம்பாழுது யாழ். வருவதற்கான ஏற்பாடுகளை இக்குழுவினர் மேற்கொண்டு வருவதாக அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ரி)

## தேசத்துரோகி கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் தேசத்துரோகி ஒருவர் விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொலைப் பட்டார்.

நேற்று முன்தினம் களுவாஞ்சிக்குடி பட்டிருப்பு பகுதியில் வைத்து இத் தேசத்துரோகி சுட்டுக் கொல்லப்பட்டார். (ரி)

## பிரிட்டனில் அகதி அந்தஸ்திற்கு புதிய சட்டங்கள்

(லண்டன்)

பிரிட்டனுக்கு அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பிக்கும் விண்ணப்பங்கள் துரிதகதியிலும் நியாயமாகவும் ஆராய்ந்து முடிவெடுக்கும் வகையில் புதிய சட்டங்கள் உருவாக்கப்பட்டு அமுல் நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி தகவலை பிரிட்டிஷ் மகாராணியார் நேற்று பிரபுக்கள் சபையில் உரையாற்றுகையில் தெரிவித்தார். (க)

## டாக்டர்களுக்கு பெற்ரோல் வழங்க புதிய நடைமுறை

(டண்டத்தரிப்பு)

யாழ். சுகாதார திணைக்களத்தில் டாக்டர்களுக்கு உத்தியோக பூர்வகடமைகளுக்காக வாகனங்களுக்கு பெற்ரோல் வழங்குவதற்கு புதியதொரு நடைமுறை செயற்படுத்தப்படவுள்ளது. தற்போது மாதந்தம் தங்கள் உத்தியோக பூர்வகடமைகளுக்காக பெற்ரோலை பெற்று வருபவர்கள் புதிய பத்திரம் ஒன்றை நிரப்பி இம்மாதம் 15-ம் திகதிக்கு முன்னர் யாழ் பிரதேச சுகாதாரசேவைப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று இது தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்று நிருபம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [72]

## சாகித்தியவிழா ஆரம்பம்

(கொழும்பு)

இந்துசமய கலாச்சார ராஜாங்க அமைச்சு நடாத்தும் தமிழ் சாகித்தியவிழா நேற்று கொழும்பில் ஆரம்பமானது.

1992க்கான இந்த விழா 5 தினங்கள் நடைபெறும். இதில் இலங்கை உட்பட இந்தியா, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த இலக்கியவாதிகள், தமிழ்மொழி ஆய்வாளர்கள் கல்விமான்கள், பத்திரிகைத் துறை சார்ந்தோர் கலந்து கொள்கின்றனர். —கே

# ஆப்கானிஸ்தானில் யுத்தநிறுத்தம்

(காபூல்)

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் கடந்த இரு நாட்களாக நடைபெற்ற கடும் யுத்தத்தின்பின் ஆப்கன் இடைக்கால அரசும் முஜாகுதீன் ஆதரவாளர்களும் யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

மேற்படி யுத்த நிறுத்த ஒப்பந்தம் நேற்றுக்காலை கைச்சாத்திடப்பட்டதாகவும், நடைபெற்ற கடும் யுத்தத்தில் 50 பேர் வரையில் கொல்லப்பட்டதாகவும் 300 பேருக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## நினைவஞ்சலிக் கூட்டம்

(கொழும்பத்துறை)

அண்மையில் காலமான இளைப்பாறிய தென்னிந்திய திருச்சபையின் பேராயர் அதிவண. சபாபதி குலேந்திரன் அடிகளாரின் நினைவஞ்சலிக் கூட்டம் யாழ் சென். ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. (154)

# மரக் கூட்டுத்தாபன ஊழியர் இடமாற்றம்

(ஊர்காவற்றுறை)

கடந்த ஒன்றரை வருடங்களாக ஊர்காவற்றுறையில் இருந்த ஐந்து யாழ். மரக்கூட்டுத்தாபன ஊழியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள மன்னார்தீவு மரக்கூட்டுத்தாபனத்துக்கு திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ள இவர்கள் இதை ஆட்சேபித்து கொழும்பு தலைமையகத்துக்கு முறைப்பாடு செய்துள்ளனர். (59)

# உதைபந்தாட்டப் போட்டியில் நெரிசலில் 9 பேர் பலி

(லண்டன்)

உதைபந்தாட்டப் போட்டியொன்றைப் பார்க்கச்சென்ற ரசிகர்களில் 9 பேர் நெரிசலால் பலியானார்கள். 300பேர் படுகாயமடைந்தார்கள்.

போர்த்துக்கலில் நடைபெற்ற உதைபந்தாட்ட சாம்பியன் மோதல் ஒன்றைப் பார்ப்பதற்காகச் சென்ற ரசிகர்கள் டிக்கட் பெறுவதற்காக நுழைவாசலில் முண்டியடித்துக்கொண்டிருந்தபோது ஏற்பட்ட நெருசலில் 9 பேர் நசியுண்டு இறந்ததுடன், 300 பேர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் உள்ளார்கள்.

நுழைவாசலில் மேற்படி சம்பவங்கள் நடைபெற்ற போதும் சாம்பியன போதல் எதுவித இடையூறுமின்றி நடைபெற்று முடிந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. —வி

## தபால்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அஞ்சல் அலுவலகங்களில் எழுதுவினைஞர்களுக்கு 60வெற்றிடங்கள் உண்டு. இந்த வெற்றிடங்கள் யாவும் உடனடியாக நிரப்பப்படும் என்று தெரிவித்தார். (சு)

## 449 தேயிலை

1-ம் பக்கத் [தொடர்ச்சி)

உடனடியாக 449 தேயிலைத் தோட்டங்கள் ஒப்படைக்கப்பட இருக்கின்றன.

அரசுக்குச் சொந்தமான தேயிலைத் தோட்டங்கள் 502 ஆகும். ஒரு கம்பனிக்கு 25 தேயிலைத் தோட்டங்கள் வீதம் ஒப்படைக்கப்பட இருக்கின்றன. (மா)

## ஐ. தே. கட்சியினர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வின் தேர்தல் நடவடிக்கைகளையும்பாதிப்பையும்ஏற்படுத்தியது என்று அவர் மேலும் கூறினார். (கே)

## வடக்கு கிழக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

என்று இருந்த இறப்பு விகிதம் 1981இல 35 ஆக குறைந்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார். [க]

## மன்னாரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டன.

மன்னார் பரப்பாங்கண்டல், உயிலங்குளம், அடம்பன், ஆட்காட்டிவெளி, பரப்புக்கடந்தான் ஆகிய இடங்களில் இராணுவ நடவடிக்கையால் தமது வீடுகளில் சூடுமிதிக்க வைத்திருந்த பெருந்தொகையான நெற்கதிர்க் குவியல்கள், நெல் மூடைகள் யாவும் சிறிலங்கா இராணுவத்தினரால் தீமூட்டி எரிக்கப்பட்டதாக யாழ்ப்பாணம் வந்த மன்னார் வாசிகள் தெரிவித்தனர். (59)

## ஏறாவூர்பற்று

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கைகள் புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும் தமிழர்களுக்கு 12 தடவைகள் மட்டுமே நிவாரணம் வழங்கப்பட்டு வந்ததாகவும் ஆனால் சிங்கள மற்றும் முஸ்லிம்களுக்கு 24 தடவைகளுக்கு மேல் நிவாரணம் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏறாவூர் பற்றில் உள்ள ஐயன்கேணி, செங்கலடி, குமாரவேலியார், தளவாய், ஆறுமுகத்தான் குடியிருப்பு, 4ம் குறிச்சி, 5ம் குறிச்சி, கொம்மாந்துறை ஆகிய இடங்களில் வாழும் தமிழர்களே ஸ்ரீலங்கா அரசின் நிவாரண நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்களாவர். (க)

## கொழும்பு

(1-ம பக்கத் தொடர்ச்சி)

யில் கறுப்பு பூனைகளும் இடம்பெற்றதாகவும் தொழிலாளர்களின் மகத்துவத்தை பற்றிய எதுவும் பேச்சில் இடம்பெறவில்லை என்றும் அவதானிகள் தெரிவிக்கிறார்கள். (மா)

## அம்பாறை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தேவார, திருவாசகங்கள் தமிழரின் பண்ணிசைச் சொத்துக்கள் இந்த இசைகள் எந்த மதத்துக்கும் உரியதல்ல இது தமிழிசையாகும் ராக வளர்ச்சிக்குத் தேவாரம் முக்கியமாகிறது

நாம் இந்த விடுதலைப் போராட்டகாலத்தில் ஒன்றாக விதைப்போம். ஒன்றாக பயிர் வளர்ப்போம், ஒன்றாக களை எடுப்போம் ஒன்றாக இசை வளர்ப்போம் ஒன்றாகபோராடுவோம்'' என்றார். (சு)

## ராஜீவ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில், விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் குறித்து தகவல்திரட்டுவதில் மத்திய அரசு தற்போது ஈடுபட்டுவருவதாகவும்தெரிவித்துள்ளார். (க)


## வெளிவந்துவிட்டது

சமூகக்கல்வி ஆண்டு 7
துரித மீட்டலுக்கான வினாவிடை
ஆக்கம்: க. சந்திரசேகரம்
வெளியீடு;- சோதி வெளியீட்டு வாரியம்
ஏகவிநியோகஸ்தர்கள்:
ஸ்ரீ லங்கா புத்தகசாலை
234, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
விலை 20/- மட்டுமே
(சி-2120)



இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு மே மாதம் 07-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Numbes B/10336/81